Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



"நீரின்றி அமையாது உலகு"

நீர்வளத்துறை

08 FEB 2024

அனுப்புநர் பொறி.க.செல்வகுமார், எம்.இ., செயற்பொறியாளர், நீ.வ.து., கீழ் பாலாறு வடிநில கோட்டம். காஞ்சிபுரம்.	பெறுநர் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட அலுவலகம், செங்கல்பட்டு.

கடித எண்: இவஅ 1 / கோ.28 NOC – பரனூர் / 2024 / நாள்: 02.02.2024.

அய்யா,

பொருள் : தடையின்மை சான்று – செங்கல்பட்டு மாவட்டம் – செங்கல்பட்டு வட்டம் – பரனூர் கிராமம் – புல எண்கள்: 88/2pt, 89/2pt, 90/2pt, 91/2pt, 92/2pt மற்றும் சில மொத்த விஸ்தீரணம் 9.24 ஏக்கர் - நன்செய் நிலத்தில் – பலமாடி அடுக்கு குடியிருப்பு கட்டிடம் கட்ட நீர்மூழ்காமை தடையின்மை சான்று கோரி M/s. Alliance Budjet Housing India Private Limited என்ற நிறுவனத்தார் மனு செய்தது – தொழில்நுட்ப அறிக்கை அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை : 1. இயக்குநர், நகர் ஊரமைப்பு திட்ட அலுவலகம், கோயம்பேடு, சென்னை–107 அவர்களின் கடித எண். SWP/BPA/043252/2023/ நாள்.11.12.2023 மற்றும் கூட்ட அறிக்கை (Minutes Agenta No.9)

2. M/s.Alliance Budget Housing India Pvt., Ltd., No.36/1, Gandhi Mandapam Road, Kotturpuram, Chennai-600 085 கடித நாள்.29.12.2023.

3. உதவி செயற்பொறியாளர், நீவது., கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு அவர்களின் கடித எண். கோ.99 / B 2429 – Paranur/ 2024 / நாள். 22.01.2024.

* * * * *

பார்வை எண்.1–ல் காணும் இயக்குநர், நகர் ஊரமைப்பு திட்ட அலுவலகம், கோயம்பேடு, சென்னை–107 அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ள கூட்ட அறிக்கை (Minutes Agenta No.9)–யில் செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், பரனூர் கிராமம் புல எண்கள்: 88/2pt, 89/2pt, 90/2pt, 91/2pt, 92/2pt மற்றும் சிலவற்றின் மொத்த விஸ்தீரணம் 9.24 ஏக்கர் நன்செய் நிலத்தில் M/s. Alliance Budjet Housing India Private Limited,No.36/1, Gandhi Mandapam Road, Kotturpuram, Chennai-600 086. என்ற நிறுவனத்தார் பலமாடி அடுக்கு குடியிருப்பு கட்டிடம் கட்ட நீர்மூழ்காமை தடையின்மை சான்று நீர்வளத்துறையிடம் பெற

வேண்டும் என தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து பார்வை எண்.2-ல் காணும் கடிதத்தில் M/s. Alliance Budjet Housing India Private Limited, என்ற நிறுவனம் நீர்மூழ்காமை தடையில்லா சான்று கோரியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மேற்குறிப்பிட்ட நிறுவனத்தாரின் புல எண் நிலங்கள் தள அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு தொழில்நுட்ப அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது.

M/s. Alliance Budjet Housing India Private Limited, என்ற நிறுவனத்தாரின் புல எண் நிலங்களானது இத்துறையின் உதவிப்பொறியாளர், நீவது., பாசனப்பிரிவு, செங்கல்பட்டு அவர்களால் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நிறுவனத்தாரின் நிலங்களின் நில மட்ட அளவுகள் அருகில் அமைந்துள்ள பரனூர் பெரிய ஏரி கலிங்களின் முழு நீர் மட்ட (FTL) அளவான (+) 42.820 மீ-ஐ அடிப்படையாக கொண்டு நிறுவனத்தாரின் புல எண் நிலங்களில் தள அலுவலர்களால் நில மட்ட அளவுகள் எடுக்கப்பட்டு பதியப்பட்டுள்ளது.

இந்த தொழில்நுட்ப அறிக்கை குறித்து பார்வை எண்.2-ல் காணும் கடிதத்தின் வாயிலாக உதவி செயற்பொறியாளர், நீவது., கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு அவர்களால் மேற்காணும் பொருள் குறித்து விரிவாக தள ஆய்வு செய்து பரிந்துரை செய்து அறிக்கை அளித்துள்ளார்.

செங்கல்பட்டு வட்டம், பரனூர் பெரிய ஏரியில் 2 மதகுகள் மற்றும் 2 கலிங்கல்கள் உள்ளது. பரனூர் பெரிய ஏரிக்கு அருகில் உள்ள காப்பு காடுகளிலிருந்தும் மற்றும் சுற்றுப்புற பகுதியின் மழைநீரும் ஆதாரமாகவும் உள்ளது. இவ்வேரியின் உபரிநீர் கலிங்கலில் விழுந்து மகேந்திரா வேல்டு சிட்டி நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள கால்வாயின் வழியாக கொளவாய் ஏரியில் சென்றடைகிறது.

நிறுவனத்தாரின் நிலங்களுக்கு வடக்கு திசையில் ஒரு பகுதியில் பரனூர் பெரிய ஏரியின் கரை பகுதியும், மற்றொரு பகுதியில் காலி நிலங்களும் அமைந்துள்ளது. கிழக்கு திசையில் காலி நிலங்களும், அடுக்குமாடி குடியிருப்புகளும் அமைந்துள்ளது. மேற்கு திசையில் ஒரு பகுதியில் காலி நிலங்களும் மற்றும் மற்றொரு பகுதியில் இன்போசிஸ் நிறுவன பேருந்து முனையம் அமைந்துள்ளது.

2/10.

தெற்கு திசையில் மகேந்திரா வேல்டு சிட்டி நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட்காரை மூலம் பக்கச்சுவர் கொண்ட மழைநீர் செல்லும் பட்டா கால்வாய் செல்கிறது. இந்த கால்வாய் அருகில் அணுகு சாலை அமைந்துள்ளது. இந்த அணுகுசாலையின் மட்ட அளவு **(+) 39.650m** எனவும் தள ஆய்வின்போது கண்டறியப்பட்டது.

இந்நிலங்களுக்கு பரனூர் ஏரியின் ஆயக்கட்டு பகுதியிலிருந்து கிடைக்கப்பெறும் மழைநீர் மற்றும் பரனூர் ஏரி மதகின் வழியாக விவசாயத்திற்கு செல்லும் பாசன நீர் நிறுவனத்தார் நிலம் மற்றும் அருகில் உள்ள பிற நிலங்களின் வழியாக செல்ல வாய்ப்புகள் உள்ளன.

M/s. Alliance Budjet Housing India Private Limited, நிறுவனத்தார் தடையின்மை சான்று கோரியுள்ள புல எண் நிலங்களின் மொத்த பரப்பு 9.24 ஏக்கர் என்பதும் அவை **"நன்செய்"** நிலங்கள் என்பது என்பது வருவாய்த்துறை ஆவணங்களின் படி தெரிய வருகிறது.

பரனூர் பெரிய ஏரியின் நீரியியல் விவரங்கள் கீழ்வருமாறு,

முழு நீர்மட்ட அளவு (FTL)	:	(+) 42.820 மீ
உச்ச நீர்மட்ட அளவு (MWL)	:	(+) 43.200 மீ
ஏரிக்கரையின் மேல்மட்ட அளவு (TBL)	:	(+) 44.120 மீ
நீர்பிடிப்பு பகுதி (Water Spread Area)	:	22.00 ஹெக்டேர்
கொள்ளளவு (Capacity)	:	0.23 மி.கன.மீ
ஆழ மதகின் அடிமட்ட அளவு (Deepest Sill Level)	:	(+) 39.690 மீ

நிறுவனத்தாரின் நிலப்பகுதியானது புவியியல் அமைப்புபடி தென்கிழக்கிலிருந்து வடமேற்கு நோக்கி சரிவாக அமைந்துள்ளது. இந்நிலையில் கடந்த 2015 -ஆம் ஆண்டின் பெருமழை வெள்ளப்பெருக்கின் பொழுது நிறுவனத்தாரின் நிலங்கள் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதி சுமார் 1 முதல் 2 அடிக்கு மேல் வெள்ள நீரால் மூழ்கியது என ஆய்வில் தெரியவருகிறது.

3/10

இந்நிறுவனத்தாருக்கு சொந்தமான நிலத்திற்கு வடக்கு திசையில் வருவாய்த்துறை 'அ' பதிவேடு மற்றும் புல எண் வரைபடத்தின் படி, புல எண். 62/A -ல் **"பரனூர் பெரிய ஏரி"** அமைந்துள்ளது.எனவே, நிறுவனத்தாரின் நிலங்களான புல எண்கள். 88/2pt, 132/2, 132/2pt, 133/1, 133/2 & 133/4 ஆகிய புல எண் நிலங்களில் பரனூர் ஏரியினை ஒட்டிய வடக்கு திசையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஆணையர், நகரம் மற்றும் ஊரகமைப்பு திட்டமிடல் அவர்களின் சுற்றறிக்கை ROC. No. 4367 / 2019 BA2, நாள். 13.03.2019–ன் படி ஏரியினை ஒட்டிய நிலப்பகுதியில் 3.00 மீ பக்க இடைவெளி (Set Back) நிறுவனத்தாரின் புல எண் நிலங்களில் விடப்பட வேண்டும்.

M/s. Alliance Budjet Housing India Private Limited, என்ற நிறுவனத்தாருக்கு சொந்தமான நிலத்தில் வருவாய்த்துறை 'அ' பதிவேடு மற்றும் புல எண் வரைபடத்தின் படி, புல எண்கள். 133/2, 134/1A, 134/1B, 134/2-ன் அருகில் புல எண். 135-ல் அரசு **பாசன வாய்க்கால்** செல்கிறது. எனவே, இந்த பாசன வாய்க்காலி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஆணையர், நகரம் மற்றும் ஊரகமைப்பு திட்டமிடல் அவர்களின் சுற்றறிக்கை ROC. No. 4367 / 2019 BA2, நாள். 13.03.2019–ன் படி ஓடையினை ஒட்டிய நிலப்பகுதியில் 3.00 மீ பக்க இடைவெளி (Set Back) நிறுவனத்தாரின் புல எண் நிலங்களில் விடப்பட வேண்டும்.

- நிறுவனத்தாருக்கு சொந்தமான பரனூர் கிராம புல எண் நிலங்களின் குறைந்தபட்ச நில மட்ட அளவு (+) 39.500 மீ முதல் அதிகபட்ச மட்ட அளவு (+) 40.060 மீ உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.
- நிறுவனத்தாரரின் நிலங்களுக்கு தெற்கு திசையில் அமைந்துள்ள அணுகு சாலையின் மட்ட அளவு **(+)** 39.650 மீ ஆகும்.
- கடந்த 2015–ஆம் ஆண்டு பெய்த பெருமழை வெள்ளத்தின் பொழுது இப்பகுதியில் பதிவான வெள்ள மட்ட அளவு **(+) 40.100 மீ** ஆகும்.

மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டிய மட்ட அளவு: **(+)40.400** மீ முதல் **(+)40.800** மீ வரை (அதாவது நிறுவனத்தாரரின் நிலங்களுக்கு தெற்கு திசையில் அமைந்துள்ள அணுகு சாலை மட்டத்திற்கு மேல் **0.72** மீ முதல் **0.98** மீ வரை கூடுதலாக)

4/10

மேற்குறிப்பிட்ட தள ஆய்வு விவரங்கள் கடந்த 2015–ஆம் ஆண்டின் வெள்ளப்பெருக்கு மற்றும் தொழில்நுட்ப கூறுகளின் அடிப்படையில் M/s. Alliance Budjet Housing India Private Limited என்ற நிறுவனத்தாருக்கு சொந்தமான செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், பரனூர் கிராமம் புல எண்கள்: 88/2pt, 89/2pt, 90/2pt, 91/2pt, 92/2pt மற்றும் சிலவற்றின் மொத்த விஸ்தீரணம் 9.24 ஏக்கர் நன்செய் நிலத்தில் பல அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட கீழ்காணும் நிபந்தனைகளை எவ்விதத்திலும் மாற்றம் செய்யாமல் தவறாமல் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நீர் மூழ்காமை குறித்த தொழில்நுட்ப அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. M/s. Alliance Budjet Housing India Private Limited, நிறுவனத்தாருக்கு சொந்தமான செங்கல்பட்டு வட்டம், பரனூர் கிராமம் புல எண்கள்: 88/2pt, 89/2pt, 90/2pt, 91/2pt, 92/2pt மற்றும் சிலவற்றின் மொத்த விஸ்தீரணம் 9.24 ஏக்கர் நன்செய் நிலத்தில் பல அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட உரிய நிலவகைபாடு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

2. நிறுவனத்தாருக்கு சொந்தமான புல எண் நிலங்களில் பரனூர் பெரிய ஏரியின் நீரினால் வெள்ள நீர் பாதிப்பு ஏற்படாமலிருக்க கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தாரின் புல எண் நிலங்களின் மட்ட அளவுகள் படிப்படியாக ஒரே சீராக உயர்த்தப்பட வேண்டும்.

வ. எண்	புல எண் மற்றும் உட்பிரிவு	பரப்பு (ஏக்கர்)	இயற்கையான மட்ட அளவு (மீ)	மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டிய மட்ட அளவு (மீ)	மண் நிரப்ப வேண்டிய உயரம்
1	88/2pt	0.04	(+) 39.980	(+) 40.800	0.820
2	89/2pt	0.09	(+) 40.020	(+) 40.800	0.780
3	90/2pt	0.08	(+) 39.960	(+) 40.800	0.840
4	91/2pt	0.09	(+) 40.060	(+) 40.800	0.740
5	92/2pt	0.09	(+) 39.840	(+) 40.600	0.760
6	95/pt	0.12	(+) 39.810	(+) 40.600	0.790
7	96/1pt	0.30	(+) 39.620	(+) 40.400	0.780
8	96/2pt	0.28			
9	97/1pt	0.42	(+) 39.680	(+) 40.400	0.720
10	97/2pt	0.30			

5/10

11	98/pt	0.18	(+) 39.620	(+) 40.400	0.780
12	129/2pt	0.25	(+) 39.500	(+) 40.400	0.900
13	130/1	0.59	(+) 39.820	(+) 40.600	0.780
14	130/2	0.53			
15	131	0.52	(+) 39.760	(+) 40.600	0.840
16	132/1	1.20	(+) 39.820	(+) 40.800	0.980
17	132/2	0.58			
18	132/3	0.14			
19	133/1	0.32	(+) 39.910	(+) 40.800	0.890
20	133/2	0.26			
21	133/3A	0.45			
22	133/3D	0.13			
23	133/4	0.30			
24	134/2	0.57	(+) 39.770	(+) 40.600	0.830
25	134/1A	0.56			
26	134/1B	0.53			
27	143/Pt	0.323	(+) 39.580	(+) 40.400	0.820
	மொத்தம்	9.243 **ஏக்கர்**			

3. நிறுவனத்தார் மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உயரத்திற்கு முறையான மண் பரிசோதனை (Soil Test) செய்த மண்ணை கொண்டு நிரப்பப்பட வேண்டும்.

4. நிறுவனத்தாருக்கு சொந்தமான நிலத்திற்கு வடக்கு திசையில் வருவாய்த்துறை **'அ' பதிவேடு** மற்றும் புல எண் வரைபடத்தின் படி, புல **எண். 62/A -ல் "பரனூர் பெரிய ஏரி"** அமைந்துள்ளது. எனவே, பரனூர் பெரிய ஏரியின் நிலத்தினை ஒட்டிய நிறுவனத்தாரின் நிலங்களான புல எண்கள். 88/2pt, 132/2, 132/2pt, 133/1, 133/2 & 133/4 ஆகியவற்றின் வடக்கு திசையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஆணையர், நகரம் மற்றும் ஊரகமைப்பு திட்டமிடல் அவர்களின் சுற்றறிக்கை ROC. No. 4367 / 2019 BA2, நாள். 13.03.2019–ன் படி ஏரியினை ஒட்டிய நிலப்பகுதியில் 3.00 மீ பக்க இடைவெளி (Set Back) நிறுவனத்தாரின் புல எண் நிலங்களில் விடப்பட வேண்டும். இந்த இடைவெளியில் நிறுவனத்தார் எவ்வித அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ள கூடாது.

6/10

5. நிறுவனத்தாருக்கு சொந்தமான நிலத்தில் வருவாய்த்துறை 'அ' பதிவேடு மற்றும் புல எண் வரைபடத்தின் படி, புல எண்கள். 133/2, 134/1A, 134/1B & 134/2-ன் அருகில் புல எண். 135-ல் அரசு பாசன வாய்க்கால் செல்கிறது. எனவே, இந்த பாசன வாய்க்காலில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஆணையர், நகரம் மற்றும் ஊரகமைப்பு திட்டமிடல் அவர்களின் சுற்றறிக்கை ROC. No. 4367 / 2019 BA2, நாள். 13.03.2019–ன் படி ஓடையினை ஒட்டிய நிலப்பகுதியில் 3.00 மீ பக்க இடைவெளி (Set Back) நிறுவனத்தாரின் புல எண் நிலங்களில் விடப்பட வேண்டும். இந்த இடைவெளி நிலப்பகுதியில் வேறு எவ்விதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளக்கூடாது.

6. நிறுவனத்தாரின் நிலப்பகுதிகள் மேற்கண்ட அளவுகளின்படி மண் கொட்டி உயர்த்தப்படவுள்ளதால் நிறுவனத்தாரின் நிலத்தில் கிடைக்கப்பெறும் மழைநீர் மற்றும் அதன் சுற்றுப்புற மழைநீரினை வெளியேற்றிட ஏதுவாக நிலத்தினை சுற்றி மழைநீர் கால்வாய் மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு திசையில் **1.50mx1.00m** என்ற அளவில் அமைக்கப்பட வேண்டும். மேலும், நிறுவனத்தார் உத்தேச கட்டிடம் கட்டவுள்ள நிலங்களுக்குள் உருவாக்கப்படும் சாலையில் **0.90m × 0.60m** என்ற அளவில் மழைநீர் கால்வாய் அமைத்து அதனை சுற்றுப்புற கால்வாயுடன் இணைத்து அதனை தெற்கு பகுதியில் செல்லும் கான்கிரீட் கால்வாயுடன் இணைக்கப்பட வேண்டும். மேற்கண்ட பணிகளை நிறுவனத்தார் தனது சொந்த செலவில் கட்டி பராமரிக்கப்பட வேண்டும்.

7. நிறுவனத்தாரின் புல எண் நிலத்தில் பலதரப்பட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும்போது வெளியேறும் கழிவு நீரை அருகில் செல்லும் பாசன வாய்க்காலில் விடக்கூடாது. நிறுவனத்தாரின் நிலத்திலேயே அவரது சொந்த செலவில் கழிவுநீர் உட்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும். மேலும், உத்தேச மனைப்பிரிவில் மழைநீர் சுற்றுப்புற வடிகால்வாய்களின் வழியாக எதிர்காலத்தில் கழிவுநீர் சென்றடையாத வண்ணம் அப்பகுதி உள்ளாட்சி அமைப்பின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

7/10

8. நிறுவனத்தாரின் நிலங்களின் ஊடே செல்லும் பரனூர் பெரிய ஏரியின் மதகு வழி பாசன வாய்க்கால் மூலம் பிற விவசாய நிலங்களுக்கு ஏரி நீர் மூலம் பாசன வசதி உள்ளதால், நிறுவனத்தாரின் நிலத்திற்கு, நிறுவனத்தார் பிறர் நிலங்களுக்கு பாசன நீர் செல்வதை எவ்விதத்திலும் தடை செய்ய கூடாது. கீழே உள்ள விளைநிலங்களுக்கு பாசன நீர் செல்வதற்கான உரிய வழிவகை நிறுவனத்தாரால் ஏற்படுத்தி தரப்பட வேண்டும்.

9. நிறுவனத்தாருக்கு சொந்தமான புல எண் நிலத்திற்கு கீழே பிறருக்கு சொந்தமான நிலங்கள் இருப்பதால், அவர்களின் விளை நிலங்களுக்கு இடு பொருட்களை எடுத்துச் செல்லவும், நிலங்களை பார்வையிட சென்று வருவதற்கும் நிறுவனத்தார் தடை ஏதும் செய்யக்கூடாது.

10. நிறுவனத்தாரின் புல எண்களில் அமைக்கப்பட உள்ள கட்டிடங்களில் விழும் மழைநீரை சேமிக்க மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு வசதி நிறுவனத்தாரின் சொந்த செலவிலேயே அமைக்கப்பட வேண்டும்.

11. நிறுவனத்தாரின் நிலங்களில் வருவாய் துறையின் மூலம் நில அளவை செய்து எல்லைக் கற்கள் பதித்து பராமரிக்கப்பட வேண்டும்.

12. நிறுவனத்தார் அளித்துள்ள நில விவர ஆவணங்களின்படி கள ஆய்வு செய்து, இந்த தொழில்நுட்ப அறிக்கை பரிந்துரை செய்யப்படுகிறது. நிறுவனத்தாரால் அளிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மைக்கு நிறுவனத்தாரே முழு பொறுப்பு ஆவார்.

13. எதிர்வரும் காலங்களில் நிறுவனத்தாரின் நிலத்தினை நீர்வளத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்திடும் பொழுது எப்பொழுதும் எவ்விதத்திலும் தடை ஏற்படுத்த கூடாது.

8/10

14. நிறுவனத்தாரின் நிலங்களில் பலமாடி அடுக்கு குடியிருப்பு கட்டிடம் கட்ட தொழில்நுட்ப ரீதியிலான இந்த அறிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகிறது. நிறுவனத்தார் இந்த நிபந்தனைகளை தவறாமல் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்றும், நிபந்தனைகளை நிறைவேற்றாத பட்சத்தில் இந்நிலத்திற்கு பிற்காலத்தில் ஏற்படக்கூடிய எவ்வகையான பாதிப்பிற்கும் நீர்வளத்துறை எவ்வித்திலும் பொறுப்பேற்காது.

15. மேற்காணும் நிறுவனத்தாரின் நிலங்களில் அனுமதிக்கப்படும் மட்ட அளவிற்கு மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டியதும், மழைநீர் வடிகால்வாய் உரிய அளவில் அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. மேலும், தற்பொழுது ஏற்பட்டுள்ள பருவகால மாற்றத்தில் ஏற்படும் மழைவெள்ள பாதிப்புகள் தவிர்க்க இயலும் என்பதால் நில வகைபாடு மாற்றம் செய்த பிறகு மனைப்பிரிவு ஒப்புதல் & வரைபட ஒப்புதல் அளிக்கும்பொழுது சம்பந்தப்பட்ட துறையோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளோ மேற்கூறிய நிபந்தனைகள் நிறுவனத்தாரால் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து அதன் பிறகு அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

<u>இணைப்பு :</u> கிராம வரைபடம் மற்றும்
ஆவணங்கள்

9/10

செயற்பொறியாளர், நீ.வ.து.,
கீழ் பாலாறு வடிநில கோட்டம்.
காஞ்சிபுரம்.

02/02/24

C1:\G:\0 ADMIN1\JDO–1\2024\NOC\Paranur NOC - Alliance (Tamil).doc



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate